மலபார் கோல்டு ஷோரூம்களில் 'ஆடி சுப லாபம்' சலுகைத் திட்டம்

தலைவர் எம்.பி. அகமது தகவல்

சென்னை,ஜூலை 23

ஆடி மாதத்தை முன்னிட்டு, தங்கம், வைரம், அன்கட் மற்றும் நவரத்தின நகைகளுக்கு கவர்ச்சிகரமான சலுகைகளுடன் 'ஆடி சுப லாபம்' சிறப்பு சலுகைகளை மலபார் கோல்டு டைமண்ட்ஸ் ஆகஸ்ட் மாதம் 16ந் தேதி வரை அறிமுகம் செய்துள்ளது என்று தலைவர் எம்.பி. அகமது தெரிவித்தார்.

இந்த சிறப்பு சலுகைகள் குறித்து தலைவர் எம்.பி. அஹம்மது பேசுகையில்கூறியதாவது:–

"ஆடி மாத சிறப்பான தருணத்தை முன்னிட்டு, வெளிப்படைத்தன்மை, தரம் மற்றும் வாடிக்கையாளர் திருப்தி ஆகியவற்றின் மீதான எங்களின் நிலையான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கும் வகையில், சிறந்த மதிப்பை வழங்கும் சலுகைகளை அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்" என்றார்.

மேலும், One India One Gold Rate,வெளிப்படையான விலை நிர்ணயம், HUID தரச்சான்று பெற்ற தங்க நகைகள், சான்றளிக்கப்பட்ட வைரங்கள், ஆயுள் முழுவதும் பராமரிப்பு சேவை, மீள்கொள்முதல் உத்தரவாதம் மற்றும் தயாரிப்பு தொடர்பான முழுமையான தகவல் வெளிப்படுத்தல் உள்ளிட்ட மலபார் கோல்டு& டைமண்ட்ஸின் வாடிக்கையாளர் உத்திரவாத சேவைகளையும் வாடிக்கையாளர்கள் தொடர்ந்து பெறலாம். இதன் மூலம், வாங்கும் ஒவ்வொரு கட்டத்திலும் முழுமையான நம்பிக்கையுடனும் மனநிம்மதியுடனும் அவர்கள் நகைகளை வாங்க முடியும்.

பக்தி, நன்றியுணர்வு, வளம் மற்றும் புதிய தொடக்கங்களின் மாதமாகக் கொண்டாடப்படும் ஆடி, தமிழகம் முழுவதும் ஆழமான பண்பாட்டு முக்கியத்துவம் கொண்டதாகும். இந்தக் காலகட்டத்தில் நகைகள் வாங்குவது மங்களகரமானதாகக் கருதப்படுவதால்ஆடி சுப லாபம் சிறப்பு சலுகைகள் மூலம் விழாக்காலத்தை கொண்டாடுகிறது என்றார் அவர்.

பழைய தங்க நகை மாற்றலாம்

ஆடி சுபலாபம் சிறப்பு சலுகையின் ஒரு பகுதியாக, அனைத்து தங்கம், அன்கட் மற்றும் நவரத்தின நகைகளின் சேதாரம் கட்டணத்தில் 30% வரை தள்ளுபடி மற்றும் வைர நகைகளின் வைர மதிப்பில் 30% வரை தள்ளுபடி பெறலாம். மேலும், பழைய தங்க நகைகளை மாற்றி புதிய நகைகள் வாங்கும் போது பழைய தங்கத்திற்கு 0% கழிவு மேலும் வெள்ளி கொலுசுகள் மற்றும் பொருட்களுக்கு சேதாரத்தில் பிளாட் 25% தள்ளுபடி மற்றும் வெள்ளி பொருட்களின் விலையிலிருந்து பிளாட் 10% தள்ளுபடி வழங்கப்படுகிறது.

ஆடி சுபலாபம் சிறப்பு சலுகைகள், பிராந்திய பாரம்பரியங்களை கொண்டாடும் மலபார் கோல்டு& டைமண்ட்ஸின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை பிரதிபலிப்பதுடன், நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட விரிவான நகைத் தொகுப்புகள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான மதிப்பையும், நம்பிக்கை, வெளிப்படைத்தன்மை, கைவினைத்திறன் மற்றும் வாடிக்கையாளர் திருப்தி ஆகிய பிராண்டின் நீடித்த மதிப்புகளையும் வழங்குகிறது''.

இவ்வாறு அவர் கூறினார்.

பரோடா வங்கியில் 119வது நிறுவன தினம்: புதிய கடன் திட்டங்கள் அறிமுகம்

சென்னை, ஜூலை 23–

பொதுத் துறையைச் சேர்ந்த பரோடா வங்கி, தனது 119வது நிறுவன தினத்தை முன்னிட்டு புதிய எண்ம சேவைகள் மற்றும் கடன் திட்டங்களை நிர்வாக இயக்குனர் தேப் தத்தா அறிமுகம் செய்தார்.

'நம்பிக்கையுடன் முன்னணி' எனும் கருப்பொருளின் கீழ் இந்த ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. இதையொட்டி, மும்பையில் நடைபெற்ற சிறப்பு நிகழ்வில் வங்கியின் நவீனமயமாக்கப்பட்ட 'பாப் வேர்ல்ட்' கைப்பேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டது.

மேலும், தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் எண்ம மாற்றத்தை விரைவுபடுத்தும் வகையில் 'ஆரோஹன் ஜிசிஜசி' மையமும், பல மொழிகளில் குரல் வழியில் சேவை வழங்கும் 'அதிதி 2.0' ஏ.ஐ. மெய்நிகர் சேவை தளமும் தொடங்கப்பட்டன.

வெளிநாட்டுப் பயணிகள் இந்தியாவில் எளிதாகப் பணம் செலுத்த 'யுபிஐ குளோபல்' வசதி மற்றும் ஏடிஎம் இயந்திரங்களில் கார்டுகளை 'டேப்' செய்து பரிவர்த்தனை செய்யும் வசதியும் அறிமுகப்படுத்தப்பட்டது.

வாடிக்கையாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், பல்வேறு புதிய கடன் திட்டங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. இளம் ஊதியதாரர்களுக்காகக் குறைந்த தவணையில் தொடங்கி, வீடு கட்ட உதவும் 'பாப் எலிவேட்' திட்டம், மனை வாங்குவதற்கான 'பாப் ஸ்வபூமி', பங்குகள் மற்றும் பத்திரங்களைப் பிணையாக வைத்து கடன் பெறும் 'பாப் பால்' திட்டம் ஆகியவை இதில் அடங்கும்.

மேலும், ஓய்வுபெற்ற அக்னிவீரர்கள் சுயதொழில் தொடங்க ரூ.5 கோடி வரை கடன் வழங்கும் 'பாப் அக்னிவீர்' திட்டமும், மின்சார வாகனங்களுக்கான சார்ஜிங் மையங்கள் அமைக்க நிதியுதவி அளிக்கும் 'பாப் கிரீன் பிளக்' பசுமை நிதித் திட்டமும் அறிமுகம் செய்யப்பட்டன.

இத்துடன் வர்த்தகர்களுக்காக 'மாஸ்டர்ஸ்ட்ரோக்' நடப்புக் கணக்குத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. கிராமப்புற மற்றும் வங்கிச் சேவைகள் கிடைக்காத பகுதிகளில் சேவையை விரிவுபடுத்தும் நோக்கில் புதிதாக 119 வணிகப் பிரதிநிதி மையங்கள் திறந்து வைக்கப்பட்டன. இந்த விழாவில் வங்கியின் செயல் இயக்குனர்கள், உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

ஸ்ரீராம் இலக்கியக் கழகம் சார்பில் வேலூரில் திருக்குறள் பேச்சுப் போட்டி

வேலூர், ஜூலை 23–

தமிழகத்தில் ஸ்ரீராம் இலக்கிய கழகம், மாணவர்கள் மத்தியில் தமிழாற்றலை வளர்த்திட திருக்குறள் பேச்சுப் போட்டி , மற்றும் கட்டுரைப் போட்டி ஓவியப்போட்டிகளை நடத்தி ஊக்கி வைத்து வருவதன் தொடர்ச்சியாக வேலூர் மண்டலத்தில் இந்த போட்டியினை நடத்தியது.

இந்த போட்டி வேலூர் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளியில் வேலூர் ஸ்ரீராம் சிட்ஸ் நிறுவனத்தின் கிளை மேலாளர் காயத்திரி தலைமையிலும், நடுவர்களாக வந்து இருந்த ஆசிரியர் பெருமக்கள் முன்னிலையில் நடைப்பெற்றது. வேலூர் தெற்கு காவல் ஆய்வாளர் ஜி.ராணி சிறப்பு விருந்தினராக பங்கேற்று மாணவ மாணவியர்களுக்கு பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கி சிறப்புறை ஆற்றி பேசுகையில், தமிழின் சிறப்புகளை மாணவர்கள் அறிய , ஸ்ரீராம் இலக்கிய கழகம் ஆண்டுதோறும் திருக்குறள் பேச்சு போட்டிகளை நடத்தி மாணவ சமுதாயத்திரை ஊக்கபடுத்தி வருவது பாராட்டுக் குரியது. மாணவர்கள் ஆர்வத்துடன் வந்து இந்த போட்டிகளில் பங்கேற்று இருப்பது மகிழ்ச்சியை தருகிறது. மாணவர்கள் வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ள எல்லா திருக்குறளை படித்திட வேண்டும். கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்க்குத் தக என்ற குறளின் கருத்துக்களை படித்து புரிந்து கொண்டு அதன்படி நடந்துக் கொண்டால் வாழ்க்கையில் மிகப்பெரிய வெற்றியை பெறலாம் என்றார்.

வேலூர் மண்டலத்தில் நடைபெற்ற இந்த போட்டி இடைநிலை, மேல்நிலை , கல்லூரி என மூன்று பிரிவுகளாக பிரித்து நடத்தப்பட்டது. இதில் 45 மாணவர்கள் பேச்சு போட்டியிலும், 35 மாணவர்கள் கட்டுரை போட்டிகளிலும் 70 மாணவர்கள் ஓவியப் போட்டிகளிலும் பங்கேற்று இருந்தனர்.

பேச்சுப் போட்டிகளில் முதல் இடத்தில் பி.தக்ஷா பி. கார்த்தியாயினி மு.சந்தோஷ் குமார், கட்டுரை போட்டிகளில் முதல் இடத்தில் வி. ரித்திகா, வ.ஸ்வேதா சீ. தீபிகா, ஓவியப் போட்டிகளில் முதல் இடத்தில் எஸ்.பாக்கியா சி.கவிதா சௌ. பிரியதர்ஷினி, ஆகியோருக்கு பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

உலகெங்கிலும் திருவள்ளுவர் சிலைகளை நிறுவியுள்ள விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் வி ஜி சந்தோசம் தமிழ்த் தொண்டைப் பாராட்டி மலேசியா உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சார்பில் தங்கப் பதக்கம் அணிவித்து "பன்னாட்டு சுடர் "என்னும் விருதினை மலேசியா கல்வி வள்ளல் ஓம்ஸ் அறவாரியத் தலைவர் ஓம்ஸ் தியாகராஜன், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் ப.கு. சண்முகம் இணைந்து வழங்கினர். மல்லைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் மல்லை சத்யா, உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் கனடா நாட்டின் தலைவர் பேராசிரியர் ராஜரத்தினம், ஔவை முருகன், பேராசிரியர் ரவீந்திரன் , ராஜா கோபால் ஆகியோர் உடன் உள்ளனர்.

'ஜன நாயகன்' திரைப்படம் வெற்றியடைய கன்னியாகுமரி நாகராஜா கோவிலில் 101 லிட்டர் பால் அபிஷேகம்

தொழிலதிபர் பால்ராஜ் ஏற்பாடு

கன்னியாகுமரி, ஜூலை 23–

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரும், முதலமைச்சருமான விஜய் நடித்துள்ள ஜன நாயகன் திரைப்படம் தமிழகம் முழுவதும் உள்ள திரையரங்குகளில் இன்று வெளியானது.

இந்த நிலையில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஆனந்த் அறிவுறுத்தலின் படியும், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் மாதவன் ஆலோசனையின் பேரிலும் 'ஜனநாயகன்' திரைப்படம் மாபெரும் வெற்றி பெற வேண்டி நாகர்கோவிலில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. த.வெ.க.வின் தீவிர தொண்டரும், தொழிலதிபருமான பால்ராஜ் சிறப்பு ஏற்பாட்டில் இந்த வழிபாடு நிகழ்வு ஒருங்கிணைக்கப்பட்டது.

கோவில் வளாகத்தில் ஒன்று திரண்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள், மூலவர் நாகராஜா சுவாமிக்கு 101 லிட்டர் பால் அபிஷேகம் செய்து த.வெ.க.வினர் வழிபட்டனர். திரையரங்குகளில் வெளியாகவுள்ள 'ஜன நாயகன்' திரைப்படம் திரையுலகில் புதிய சாதனைகளைப் படைத்து வெற்றிபெற வேண்டும் என்றும், கட்சித் தலைவர் விஜய்யின் மக்கள் பணி சிறக்க வேண்டும் என்றும் பிரார்த்தனை செய்தனர். கோவிலுக்கு வருகை தந்த பக்தர்களுக்கும் பொதுமக்களுக்கும், தொழிலதிபர் பால்ராஜ் சார்பில் இனிப்புகளும் பிரசாதமும் வழங்கப்பட்டன.

இந்த சிறப்பு வழிபாட்டு நிகழ்வில் த.வெ.கவின் குமரி கிழக்கு மாவட்ட செயலாளர் மாதவன், இணை செயலாளர் பிரேம்குமார், கவுன்சிலர் ஸ்ரீலிஜா, இளைஞரணி அமைப்பாளர் வாகை ராஜன், செயற்குழு உறுப்பினர்கள் சக்தி குமரன், நிகேஷ், தொண்டரணி இணை அமைப்பாளர் அசோக் செல்லம், 15வது வார்டு செயலாளர் ஜெரின் மற்றும் நிர்வாகிகள் ஆனந்த செல்வம், மில்டன் உள்பட மாவட்ட, நகர, ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

பெயர் மாற்றம்

நான் **RAJESWARI KUMAR,** கணவர் பெயர்: **S.Kumar**, பிறந்த தேதி: **03.02.1958**, எண்.335, KTS மெயின் ரோடு, மாமல்லன் நகர், அரபனஞ்சேரி, பெரிய காஞ்சிபுரம், காஞ்சிபுரம் 631502, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **RAJEE KUMAR** என்று அழைக்கப்படுகிறேன்.

RAJESWARI KUMAR

பொது அறிவிப்பு

எனது தாய் **திருமதி. R.கலியம்மாள்** அவர்கள் 24.05.2018 அன்று D-31/02 அடையார் அவென்யூ, ஐஐடி மெட்ராஸ் வளாகம், சென்னை 600 036 என்ற இடத்தில் காலமானார். தற்போது அவரது இறப்புச் சான்றிதழைப் பெறுவதற்காக, வருவாய் கோட்ட அலுவலர் (RDO) / வட்டாட்சியர் (Tahsildar) அலுவலகத்தில் தாமதப் பதிவு (Late Registration) செய்ய விண்ணப்பித்துள்ளோம். எனது தாய் திருமதி R. கலியம்மாள் என்பவரின் இறப்பு தொடர்பாக யாருக்கேனும் ஏதேனும் ஆட்சேபனை அல்லது உரிமை கோரல்கள் இருந்தால், இந்த விளம்பரம் வெளியான **15 நாட்களுக்குள்** உரிய ஆதாரங்களுடன் மேலே குறிப்பிட்ட அதிகாரியிடம் நேரில் முறையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விண்ணப்பதாரர் விவரம்:
R. பழனிவேல், S/o V. ராமசாமி
D-31/02 அடையார் அவென்யூ,
ஐஐடி மெட்ராஸ் வளாகம்,
சென்னை 600 036

IN THE COURT OF XV ASSISTANT CITY CIVIL JUDGE AT CHENNAI
O.S No. 6925 Of 2025

M/s. Canara Bank
Represented by its
Chief Manager,
Fort Saint George Branch,
Fort Saint George Secretariat,
Chennai-600 009. .... Plaintiff

-Vs-

1.S.Janarthanan
S/o.sundar Singh
No.35/91, Madurai Street,
Ayanavaram, Chennai -600 023
2.A.Aneezkhan,
No.49 A, 6th Street, 2nd Main Road,
Arunodhayam Nagar,Nanmangalam,
Chennai-600117 ...Defendants

To,
1.S.Janarthanan, S/o.sundar Singh
No.35/91, Madurai Street,
Ayanavaram, Chennai -600 023
2.A.Aneezkhan,
No.49 A, 6th Street, 2nd Main Road,
Arunodhayam Nagar,
Nanmangalam, Chennai 600 117
...Defendants

Please take notice that the above Suit in O.S.No.6925 of 2025 filed by the plaintiff against you for the Recovery of Money for a sum of Rs.4,12,133.44/- and the said case is posted for your appearance before the above said Hon'ble XV Assistant City Civil Court on 04.08.2026 at 10.30 am. Kindly you are requested to appear either in person or through counsel on the said date, failing which the matter will be decided in your absence.

A.AMEEN
Counsel for Plaintiff

எஸ்இபிசி லிமிடெட்

SEPC Engineering the Future

CIN : L74210TN2000PLC045167

பதிவு அலுவலகம்: 3வது தளம், ஏஎஸ்வி ஹன்சா டவர்ஸ், எண் 53/20, கிரீம்ஸ் சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை – 600006 Visit us at: www.sepc.in E-mail: info@sepc.in

திருத்தம் / பிழைத்திருத்த அறிவிப்பு

எஸ்இபிசி லிமிடெட் (CIN: L74210TN2000PLC045167) உறுப்பினர்களுக்கு, மேற்படி அறிவிப்பில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சி நிரல் விபரங்களை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்ட ஜூலை 6, 2026 தேதியிட்ட தபால் வாக்கு அறிவிப்பு ("அறிவிப்பு") தொடர்பான திருத்த அறிக்கை:

நிறுவனத்தின் உறுப்பினர்கள் கீழ்க்கண்டவற்றைக் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்:

1. **தீர்மான எண்.3 –** பக்க எண் 4–5–ல் – "முன்மொழியப்பட்ட ஒதுக்கீடு பெறுபவர்களின் விவரங்கள் மற்றும் ஒதுக்கீடு செய்யப்படவுள்ள நிறுவனத்தின் அதிகபட்ச சமபங்குகளின் (Equity Shares) எண்ணிக்கை ஆகியவை கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன:" என்பதைப் பின்வருமாறு வாசிக்கவும்:

வ. எண்	முன்மொழியப்பட்ட ஒதுக்கீடு பெறுபவர்களின் பெயர்கள்	அவெனிரில் பரிமாற்றம் செய்யப்படவுள்ள சமபங்குகளின் எண்ணிக்கை	பரிமாற்றத்திற்கு ஈடாக எஸ்இபிசி லிமிடெட் நிறுவனத்தால் வெளியிடப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட உள்ள சமபங்குகளின் எண்ணிக்கை	தற்போதைய நிலை / வகை	முன்மொழியப்பட்ட நிலை / வகை
1	அவெனிர் ஆயில் ஃபீல்டு எக்யூப்மென்ட் எல்.எல்.சி, யு.ஏ.இ	3	5,10,00,000	புரமோட்டர் அல்லாதவர்	புரமோட்டர் அல்லாதவர்
2	ட்ரான்வெல் ஹாலிடேஸ் பிரைவேட் லிமிடெட்	44	74,80,00,000	புரமோட்டர் அல்லாதவர்	புரமோட்டர் அல்லாதவர்
3	ஜூம்ஸ்டட் இம்பெக்ஸ் பிரைவேட் லிமிடெட்	43	73,10,00,000	புரமோட்டர் அல்லாதவர்	புரமோட்டர் அல்லாதவர்
	மொத்தம்		1,53,00,00,000		

2. **விளக்க அறிக்கையின் அயிட்டம் எண்: 3 –** பக்க எண் 16, குறிப்பு எண் "f"–ல் – "வெளியீட்டு விலை, தொடர்புடைய தேதி மற்றும் எந்த அடிப்படையில் அல்லது நியாயத்தின்படி விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது, அல்லது சலுகை/அழைப்பு விடுக்கப்படுகிறது" மற்றும் பக்க எண் 17, குறிப்பு எண் "g"–ல் – "மதிப்பீட்டைச் செய்த மதிப்பீட்டாளரின் பெயர் மற்றும் முகவரி" – ஆகியவற்றுக்கான மதிப்பீட்டு அறிக்கையின் (Valuation Report) இணைய இணைப்பை (Weblink) பின்வருமாறு வாசிக்கவும்: https://www.sepc.in/CompaniesAct–and–SEBI–Compliances.aspx

3. **விளக்க அறிக்கையின் அயிட்டம் எண்: 3 –** பக்க எண் 18, குறிப்பு எண் "k" மற்றும் பக்க எண் 19, குறிப்பு எண் "o"–ல் – "யாருக்கு இந்த ஒதுக்கீடு செய்ய முன்மொழியப்பட்டுள்ளது என்ற நபர்களின் வகுப்பு அல்லது வகுப்புகள் மற்றும் முன்னுரிமை வெளியீட்டிற்குப் (Preferential issue) பிறகான ஒதுக்கீடு பெறுபவர்களின் தற்போதைய மற்றும் முன்மொழியப்பட்ட நிலை, அதாவது நிறுவனர் (Promoter) அல்லது நிறுவனர் அல்லாதவர் (Non–promoter) மற்றும் முன்மொழியப்பட்ட ஒதுக்கீடு பெறுபவர்களின் அடையாளம் (ஒதுக்கீடு செய்யப்படவுள்ள சமபங்குகளின் இறுதிப் பலனடையும் உரிமையாளர்களாக உள்ள மற்றும்/அல்லது இறுதியாகக் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள தனிநபர்கள் உட்பட), முன்னுரிமை வெளியீட்டிற்குப் பிந்தைய மூலதனத்தில் அவர்கள் வைத்திருக்கக்கூடிய சதவீதம் (%) மற்றும் முன்னுரிமை வெளியீட்டின் விளைவாக கட்டுப்பாட்டில் ஏற்படும் மாற்றம், ஏதேனும் இருப்பின், மற்றும் முன்னுரிமை வெளியீட்டிற்குப் பிறகான ஒதுக்கீடு பெறுபவர்(களின்) தற்போதைய மற்றும் முன்மொழியப்பட்ட நிலை, அதாவது நிறுவனர் அல்லது நிறுவனர் அல்லாதவர்:" என்பதை விளக்க அறிக்கையின் கீழ் பின்வருமாறு வாசிக்கவும்:

வ. எண்	முன்மொழியப்பட்ட ஒதுக்கீடு பெறுபவர்களின் பெயர்கள்	வெளியீட்டிற்கு முந்தைய வகை	இறுதிப் பலனடையும் உரிமையாளர்களாக உள்ள தனிநபர்களின் பெயர்கள்	பங்கு வெளியீட்டிற்கு முந்தைய பங்குடைமை		ஒதுக்கப்பட வேண்டிய பங்குகளின் எண்ணிக்கை	பங்கு வெளியீட்டிற்குப் பிந்தைய பங்குரிமை		வெளியீட்டுக்குப் பிந்தைய வகை
				பங்குகள் எண்ணிக்கை	%		பங்குகள் எண்ணிக்கை	%	
1	அவெனிர் ஆயில் ஃபீல்டு எக்யூப்மென்ட் எல்.எல்.சி, யு.ஏ.இ	புரமோட்டர் அல்லாதவர்	உமா குணசீலன்	0	0	51000000	51000000	1.47	புரமோட்டர் அல்லாதவர்
2	ட்ரான்வெல் ஹாலிடேஸ் பிரைவேட் லிமிடெட்	புரமோட்டர் அல்லாதவர்	அப்துல்லா அப்துல்ரஹ்மான் யூசுப் அகமது அல் நாசர்	0	0	748000000	748000000	21.52	புரமோட்டர் அல்லாதவர்
3	ஜூம்ஸ்டட் இம்பெக்ஸ் பிரைவேட் லிமிடெட்	புரமோட்டர் அல்லாதவர்	சுல்தான் யூசெப் நாசர் அல்ஹோசனி	0	0	731000000	731000000	21.03	புரமோட்டர் அல்லாதவர்

4. **விளக்க அறிக்கையின் அயிட்டம் எண்: 3 –** பக்க எண் 19–20, குறிப்பு எண் "p"–ல் — முன்மொழியப்பட்ட ஒதுக்கீடு பெறுபவர் வைத்திருக்கக்கூடிய முன்னுரிமை வெளியீட்டிற்குப் பிந்தைய மூலதனத்தின் சதவீதம் மற்றும் முன்னுரிமை வெளியீட்டின் (Preferential offer) விளைவாக நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் ஏற்படும் மாற்றம், ஏதேனும் இருப்பின் — என்பதைப் பின்வருமாறு வாசிக்கவும்:

பரிந்துரைக்கப்பட்ட ஒதுக்கீடு பெறுபவர்களின் பெயர்	வகை	பங்கு வெளியீட்டிற்கு முந்தைய பங்குடைமை		பங்கு வெளியீட்டிற்குப் பிந்தைய பங்குரிமை	
		பங்குகள் எண்ணிக்கை	%	பங்குகள் எண்ணிக்கை	%
அவெனிர் ஆயில் ஃபீல்டு எக்யூப்மென்ட் எல்.எல்.சி, யு.ஏ.இ	புரமோட்டர் அல்லாதவர்	0	0	51000000	1.47
ட்ரான்வெல் ஹாலிடேஸ் பிரைவேட் லிமிடெட்	புரமோட்டர் அல்லாதவர்	0	0	748000000	21.52
ஜூம்ஸ்டட் இம்பெக்ஸ் பிரைவேட் லிமிடெட்	புரமோட்டர் அல்லாதவர்	0	0	731000000	21.03

*பகுதியாகச் செலுத்தப்பட்ட பங்குகள் அனைத்தும் முழுமையாகச் செலுத்தப்பட்ட பங்குகளாக மாற்றப்பட்டுள்ளன எனக் கருதி

5. **விளக்க அறிக்கையின் அயிட்டம் எண்: 3 –** பக்க எண் 21, குறிப்பு எண் "w"–ல் – பயிற்சி நிறுவனச் செயலாளரின் (Practicing Company Secretary) சான்றிதழ் – சான்றிதழுக்கான இணைய இணைப்பை (Weblink) பின்வருமாறு வாசிக்கவும்: https://www.sepc.in/Companies–Act–and–SEBI–Compliances.aspx.

மேலே குறிப்பிட்டுள்ளவாறு தபால் வாக்கு அறிவிப்பின் விளக்க அறிக்கையில் செய்யப்பட்டுள்ள மாறுதல்கள் மற்றும்/அல்லது சேர்க்கப்பட்ட விவரங்களுக்காக, 06 ஜூலை 2026 தேதியிட்ட தபால் வாக்கு அறிவிப்பை, உறுப்பினர்கள் இந்தத் திருத்த அறிக்கையுடன் சேர்த்துப் படிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்தத் திருத்த அறிக்கையின் மூலம் மாற்றியமைக்கப்பட்ட மற்றும்/அல்லது சேர்க்கப்பட்ட விவரங்களைத் தவிர்த்து, தபால் வாக்கு அறிவிப்பில் உள்ள மற்ற அனைத்து உள்ளடக்கங்களும் எவ்வித மாற்றமுமின்றி அப்படியே இருக்கும்.

குழு உத்தரவுப்படி
எஸ்இபிசி லிமிடெட்டிற்காக
CS T ஸ்ரீராமன்
நிறுவனச் செயலாளர் மற்றும் தகவிணக்க அதிகாரி
உறுப்பினர் எண். A68102

இடம்: சென்னை
தேதி : 23.07.2026

NOTICE OF LOSS OF SHARE CERTIFICATES
(For Claim From IEPF Authority)

Pursuant to rule 8 of the Investor education and protection Fund (Accounting ,Audit , Transfer and Refund) Rules,2016 Notice is hereby given that the Below Mentioned share certificates issued by Shriram Finance Limited in my Father name has been lost/misplaced:

Folio No.	Name of Shareholder(s)	Shares	Certificate No(s).	Distinctive Nos.	
				From	To
80806	Sampath K R Deceased)	675	611637	71285238	71285912

Any person who has a claim in respect of the said Securities should lodge such claim with evidence to the Company,at its Registered Office ,Shriram Finance Ltd (formly known as Shriram Transport Finance company Ltd,14A,South Phase,Industrial Estate,Guindy,Chennai- 600032 or its Share Transfer Agents, Integrated Registry Management Services Pvt. Ltd , "Kences Towers", 2nd Floor, No.1 Ramakrishna Street, North Usman Road, T Nagar, Chennai – 600 017 within 15 days of publication of this notice,else the Company will proceed to Settle the claim in favour of the registered holder.The company shall not entertain any claim thereafter. Any person dealing with the above said shares will be doing so at their own risk

S.Jayanthi,
25,Mahalakshmi street, T Nagar,
Chennai, Tamilnadu-600017

Place : Chennai
Date : 23.07.2026

பெயர் மாற்றம்

Old Given Name: DIVYA KAWAD JAIN Old Surname: JAWERILAL, தந்தை பெயர்: Jawerilal Kawad, பிறந்த தேதி: 11/07/1993, எண். 9/2, கரியப்பா தெரு, புரசைவாக்கம், வேப்பேரி, சென்னை - 600007, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி New Given Name: DIVYA, New Surname: KAWAD JAIN என்று அழைக்கப்படுகிறேன்

Old Given Name: Divya Kawad Jain ,
Old Surname: Jawerilal